விலை சதம் 75 ★

# ஈழநாடு
THE EELANADU

மலர் 23 மார்கழி 29 ரவி அவ் 16 இதழ் 332
யாழ்ப்பாணம் புதன்கிழமை 13-1-82

Announcing Jaffna's own
New English Weekly

SATURDAY
REVIEW

All advance Annual subscriptions
to
Kalai Nilayam Ltd.
303, K. K. S. Road,
Jaffna.
Rs. 120/- (including postage
Cheques payable to
Kalai Nilayam Ltd.

## கொலை எனத் தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் மணிக்கூட்டு வீதியில் உள்ள அச்சகம் ஒன்றில் துப்பாக்கியால் சுடப்பட்டு இறந்த சதாசிவம் சிவசண்முகமூர்த்தியின் மரணம் கொலை எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

பிரேதபரிசோதனை நடத்திய சட்டவைத்திய அதிகாரி டாக்டர் என். சரவணபவானந்தன் பிரேதபரிசோதனை அறிக்கையைச் சமர்ப்பித்தபின்னர் யாழ் நீதவான் திரு ரி. ஜே. ஜோகநாதன் இத் தீர்ப்பை வழங்கினர். (இ)

# தமிழீழப் பிரகடனம் திடீர் ஒத்திவைப்பு?

(கொழும்பு)
**உத்தேச தமிழீழப் பிரகடனத்தை லண்டனிலுள்ள தமிழீழ ஒருங்கிணைப்புக்குழு, நேற்று திடீரென ஒத்திவைத்திருப்பதாக கொழும்புக்குக்கிடைத்திருக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.**

**லண்டனில் நேற்று நடைபெற்ற தமிழீழ ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், பெரும்பான்மையினர் தெரிவித்தகருத்துக்களைத்தொடர்ந்தே 'இடைக்கால அரசு' நிறுவும் யோசனை ஒத்திவைக்கப்பட்டதாக மேற்படி செய்திகள் ஊர்ஜிதப்படுத்தின.**

தமிழீழ ஒருங்கிணைப்புக்குழுவின் விசேட கூட்டம் நேற்று லண்டனில் நடைபெற்றது. இக் கூட்டத்திற்கு திரு. கிருஷ்ணு வைகுந்தவாசன்உட்பட ஏராளமானவர்கள் சமூகமளித்திருந்தனர்.

இக்கூட்டத்தில் திரு.வைகுந்தவாசன் தனது நிலையைத் தெளிவுபடுத்தினர், தமிழீழப் பிரகடனம் நிச்சமானது; தவிர்க்க முடியாதது என்று அவர் வற்புறுத்திக் கூறியபோதிலும்; பெரும்பான்மையான உறுப்பினர்கள் 'இடைக்கால அரசு' நிறுவும் யோசனையை முற்றும் முழுதுமாக நிராகரித்து, இதுபற்றி முடிவு செய்ய அவகாசம் கேட்டதாகவும் லண்டனிலிருந்து வெளிவரும் செய்திகளிலிருந்து அறியப்படுகிறது.

லண்டனிலுள்ள தமிழீழ ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டம் இம்மாதம் இரண்டாம் திகதி நடைபெற்றபோதிலும் திரு. கி. வைகுந்தவாசனின் கோரிக்கை மீது அவரது விளக்கம் தொடர்பாக நேற்றுவரை அவகாசமளிக்கப்பட்டு, நேற்று விசேட கூட்டம் நடைபெற்றது.

நேற்றையகூட்டத்தில் திரு. கி. வைகுந்தவாசன் தவிர; டாக்டர் ஸ்ரீனிவாசன் உட்பட லண்டனிலுள்ள தமிழீழப் பிரமுகர்கள் அத்தனைபேரும் தமிழீழப் பிரகடனம் ஒத்தி

(6ம் பக்கம் பார்க்க)

## ஸ்கந்தவரோதய கல்லூரி இரசாயனபொருட்கள் பொலிசாரிடம் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)
சுன்னுகம் ஸ்கந்தவரோதய கல்லூரியிலுள்ள இரசாயனப் பொருட்கள் பாதுகாப்பிற்காக பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

காங்கேசன்துறைப்பொலிஸ் உயர் அதிகாரிகள், கல்லூரிக்குச் சென்று அதிபர் திரு.பொ. நாகரத்தினத்திடம், பாதுகாப்பிற்காக கல்லூரியிலுள்ள இரசாயனப் பொருட்களை தற்காலிகமாக பொலிசில் ஒப்படைக்குமாறு கேட்டதைத் தொடர்ந்து மேற்கண்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

சில தினங்களுக்கு முன் இக் கல்லூரியில் பிரதி செய்யும் 'ரோணியோ' யந்திரம் கொள்ளையடிக்கப்பட்டதைத் தொடர்ந்து, தற்போது இரசாயனப் பொருட்கள் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (க)

## யாழ். மாநகரசபை மக்களின் வரிப்பணத்தை வீணே செலவிடுகிறது
### கூட்டணி உறுப்பினர் கண்டனம்

(ஏ. வி. மாணிக்கம்)
''யாழ். மாநகரசபைபொது மக்களிடமிருந்து பெறும் வரிப் பணத்தை தேவையற்றமுறையில் செலவழிக்கிறது. பழைய வீதிகள் இப்பொழுதும் அதே நிலையில்தான் காட்சியளிக்கின்றன. மாநகரசபை உறுப்பினர் குழுக்களுக்கு சபை உத்தியோகத்தர்களின் வேலைகளைக் கவனிக்கவோ, விசாரணை செய்யவோ எதுவித அதிகாரமும் இல்லை''

இவ்வாறு யாழ் மாநகர சபை உறுப்பினர் திரு. எஸ், தியாகராஜா, யாழ் மாநகர சபையின் மாதாந்தபொதுக் கூட்டத்தில் பேசுகையில் கண்டனம் தெரிவித்துள்ளார்.

யாழ் மாநகர முதல்வர் திரு. இராஜா விஸ்வநாதன் தலைமையில் நேற்று இக் கூட்டம் நடைபெற்றது.

கடந்தவருடம் நடைபெற்ற பல மாநகர சபையின் கூட்டங்களுக்கு தான் சமூகமளிக்காதற்குக் காரணம், பெரிய கடை சந்தை நிலைமையை யிட்டுத்தான் என்றும் அவர் சொன்னர்.

திரு. எஸ். தியாகராசா மேலும் பேசுகையில் கூறியதாவது: வடபகுதியில் இருக்கும் ஒரே ஒரு மணிக்கூட்டுக் கோபுரம் பலவிதமாக நேரம் காட்டுகின்றது. மராமத்துக் குழுவின் தலைவராக நான் இருந்தபோது நாலரைலட்சம் ரூபா டென்டர் கோரப்பட்டது. ஆனல் இன்றுவரை எதுவும் செய்யப்படவில்லை.

யாழ். வாடிவீட்டுக்கு செலவழித்த பணத்தைக்கொண்டு சுகக் கட்டிடத்துக்கருகில் நவீனமுறையில் ஒரு வாடிவீடு கட்டியிருந்தால் எவ்வளவோ வருமானம் மாநகர சபைக்குக் கிடைத்திருக்கும்.

இந்த நவீன வாடி வீடு குறித்து தான் முன்னர் குறிப்பிட்டதை மாநகரசபை அசட்டை செய்தது என்றும் அவர் கண்டித்துப் பேசினர்.

## ஓர் அன்பான வேண்டுகோள்

தவிர்க்க முடியாத சூழ்நிலைகள் காரணமாக 'ஈழநாடு' இதழின் விலையை தமிழ்த்திருநாளாம் பொங்கல்தினமான (14—01—1982) நாளை தொடக்கம் ஒரு ரூபாவாக அதிகரிக்க வேண்டியுள்ளது என்பதை வாசக நேயர்களுக்கு அறிவித்துக் கொள்கின்ருேம். பல இன்னல்களுக்கிடையிலும் எம்முடன் சகல விதத்திலும் ஒத்துழைத்துவரும் வாசகர்களும், விளம்பரதாரர்களும், விற்பனையாளர்களும் இந்தச் சிறு மாற்றத்தை மனமுவந்து ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகின்ருேம்.

— நிர்வாகி

ஃ ஃ ஃ ஃ

## அறிவித்தல்

14—01—1982 பொங்கல் தினத்தன்று 'ஈழநாடு' ஊழியர்களுக்கு விடுமுறையாதலால் 15-ம் திகதி மட்டும்'ஈழநாடு' இதழ் வெளிவரமாட்டாதென்பதை அறிவித்துக் கொள்கின்ருேம். —நிர்வாகி

## யாழ். மாவட்ட அபிவிருத்திசபையின் கோரிக்கைகள் எதையும் அரசு இதுவரை நிறைவேற்றவில்லை
### தலைவர் 'நடா' கவலை

(யாழ்ப்பாணம்)
சித்தவைத்தியத் துறையை யாழ் பல்கலைக்கழகம் அல்லது யாழ். மாவட்ட அபிவிருத்தி சபை பொறுப்பேற்று நடத்த நடவடிக்கைஎடுக்கவேண்டும்'' என்று எதிர்க்கட்சி முதல்வர் திரு. அ. அமிர்தலிங்கம், யாழ் மாவட்ட அபிவிருத்தி சபையின் மாதாந்தப் பொதுக் கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

யாழ் மாவட்ட அபிவிருத்தி சபைத்தலைவர் திரு. சு. நடராசா தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

''கைதடியில் சித்தவைத்தியக்கல்லூரிக்கென சட்டப்பட்ட கட்டிடத்தில் சித்த வைத்தியக் கல்லூரியொன்றை யாழ்பல்கலைக்சழகம் நடாத்தவேண்டும். அது சாத்தியமாகாவிட்டால் அரசாங்க அனுசரணையுடன் யாழ். மாவட்ட அபிவிருத்திசபை நடாத்தவேண்டும்'' என்னும் பிரேரணையை திரு. ஆ. நடராசா கொண்டுவந்திருந்தார்.

பருத்தித்துறை எம். பி. திரு. துரைரத்தினம் இப் பிரேரணை மீது பேசுகையில், ''எதற்கும் பணம்தான் முக்கியம். சித்தவைத்தியத்துறையில் சர்வகலாசாலை பட்டம் சொடுக்கிறது வேறு, நாங்கள கொடுக்கிற மதிப்பு வேறு. இதற்கு வித்தியாசங்கள் உண்டு. சர்வகலாசாலை கொடுக்கும் பட்டத்துக்கு மக்கள் மத்தியில் மதிப்புண்டு'' என்ருர்.

உடுப்பிட்டி எம். பி. திரு. கே. இராசலிங்கம் பேசுகையில் கூறியதாவது:

''அடிப்படைக் கல்வித்தகைமையில் சித்த ஆயுள்வேதம் இருக்கிறதா என்று பாரக்க வேண்டும். கிளிநொச்சியில் அமைக்கப்படும் மருந்துற்பத்தி தொழிலகம நவீன முறையில் மருந்துகள் தயாரிக்கக் கூடியதாக நடவடிக்கை எடுத்தால் வரவேற்க கூடியதாயிருக்கும்''

கோப்பாய் எம். பி. திரு. ஆ. மு. ஆலாலசுந்தரம் பேசுகையில் முற்காலத்தில் சித்த வைத்தியத்துக்கு பரம்பரை முறையிலேயேகல்வித்தகைமை கணிக்கப்பட்டுவந்தது. இந்த அடிப்படையில் இப்பொழுதும் எடுக்கிருர்கள். இது மாற்றப்

(6ம் பக்கம் பார்க்க)

## 52பேர் உயிருடன் புதையுண்டனர்

மெடான்,ஜன.12
மெடான் என்ற இடத்தில் ஏற்பட்ட மண்சரிவினுல் 52 பேர் உயிருடன் புதையுண்டதுடன் 15 வீடுகளும் இச்சரிவினுல் மண்ணில் சிக்குண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்மேற்கு மெடானிலிருந்து 341 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள ஷிஹோபக் என்ற கிராமத்திலேயே மேற்படி மண்சரிவு ஏற்பட்டுள்ளது.

மண்சரிவு ஏற்படுவதைக் கண்டோர் இதுபற்றித் தெரிவிக்கையில் கடந்த சனிக்கிழமை பயங்கர சத்தத்துடன் மேற்படி மண்சரிவு ஏற்பட்டு 30 நிமிடத்துக்குள், வீடுகளும் வீதிகளும் புதையுண்டன என்ருர்கள். (கி)

விற்பனையாகின்றன:
புலமைப் பரிசிற் பரீட்சை (5ந் தர பயிற்சிகள்)
பொது உளச்சார்பு, கணிதம்,
தமிழ் மொழி.
வெளியீடு:
ஞானசுரபி புத்தகக்கம்பனி
யாழ்ப்பாணம்.
1964

மணிவாக்கு

ஒரு ஷேக்ஸ்பியருக்கு ஆயிரம் அணுக்குண்டுகள் ஈடாகாது,

—சேர் ஐவர் ஜென்னிங்ஸ்

# நமது நோக்கு

## புகையும் எரிமலையை தணிக்கும் மருந்து!

எப்பொழுதும் எரிந்துகொண்டிருக்கும் எரிமலையாகவே மத்தியகிழக்கு இருந்து வருகின்றது.

பாலஸ்தீன் மக்களின் பிரச்னைக்குச் சகல தரப்பினரும் ஏற்றுக்கொள்ளும் விதத்தில் இறுதியான ஒரு முடிவு ஏற்படும் வரையில் இந்த எரிமலை ஒருபோதும் தணியப்போவதில்லை.

இது வெறும் புகையைக் கக்கிக்கொண்டு மாத்திரம் இருக்கவில்லை. அவ்வப்போது தீ ஜுவாலைகளையும் கக்குகிறது! வெடித்துச் சிதறி அனர்த்தமும் விளைவிக்கின்றது.

மத்திய கிழக்குப் பிரதேசத்தோடு மாத்திரமே இதன் 'சூடு' அடங்கிவிடுவதாகவும் இல்லை. உலக நாடுகள் அனைத்துமே இதன் பாதிப்புக்குள்ளாகி வருகின்றன.

இந்த எரிமலையைத் தணிய வைக்கக்கூடிய சஞ்சீவி ''மருந்தை''க் கையில்வைத்துக்கொண்டிருக்கும் மேலாதிக்க வல்லரசுகள் இரண்டும், அதனைச் சரியாகப் பிரயோகிக்காது புகை கக்கும் எரிமலைச்சூட்டில் குளிர் காய்ந்துகொண்டிருப்பது தான் கவலையளிக்கும் விடயமாகும்!

புகைந்துகொண்டிருக்கும் இந்தஎரிமலை வாயிலைக் கிளறிவிட்டதுபோன்ற ஒரு செயலைக் கடந்த மாதம் இஸ்ரேல் செய்துள்ளது.

1967ம் ஆண்டு யுத்தத்தின்போது சிரியாவிடமிருந்து கைப்பற்றிய கோலான் குன்றுப் பகுதியை இஸ்ரேல் அரசு, கடந்த மாதம் பாராளுமன்றத்தில் சட்டம் ஒன்றை நிறைவேற்றியதன் மூலம் ''சட்டம், நீதிபரிபாலனம்' அரச நிர்வாகம்'' ஆகியவற்றை விஸ்தரித்து தன் பிரதேசத்துடன் இணைத்துக்கொண்டுவிட்டது. இச்செயல் அரபுநாடுகளின் ஆவேசத்தைத் தூண்டி விட்டிருக்கின்றது. நேரடியாகப் பாதிப்புக்குள்ளாகியுள்ள சிரியா கொதித்தெழுந்திருப்பது அதிசயம் அல்ல.

இஸ்ரேல் தனது தீர்மானத்தைக் கைவிடவேண்டும் என்று ஐ. நா. பாதுகாப்புச் சபை ஏற்கனவே ஏகமனதாகஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. இத்தீர்மானத்தை அணிசேரா நாடுகள் பலமாக ஆதரித்தன. அமெரிக்காவும் கூட ஆதரித்து வாக்களித்தது'

''இதற்குச் செவிசாய்க்காவிடில் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படும்'' எனப் பாதுகாப்புச் சபை எச்சரிக்கையும் விடுத்த. இதற்கு முன்பே இஸ்ரேலுடன் செய்து கொள்ளப்பட்ட ''கேந்திர ஒத்துழைப்பு'' ஒப்பந்தத்தை அமெரிக்கா இடை நிறுத்தி வைப்பதாக அறிவித்திருந்தது.

ஆனல் இஸ்ரேல்அசைந்து கொடுக்கவில்லை!

இந்த நிலைமையில் இஸ்ரேலை ''பொருளாதார ராணுவ ராஜீய'' துறைகளில் ஒதுக்கிவைக்கவேண்டும் என்ற ஒரு தீர்மானத்தை சிரியா பாதுகாப்புச்சபையில் தாக்கீதுசெய்து இப்பொழுது அதன மீது விவாதமும் நடைபெற்று வருகின்றது.

இதே சமயம் சிரியாவின் வெளிநாட்டு அமைச்சரும் பிரதி பிரதம மந்திரியுமான ஜனுப் அப்தெல் — ஹாலிம் கதாம் அடுத்தவாரம் அளவில் மாஸ்கோவுக்குச் செல்லவிருப்பதாகச் செய்திகள்வந்துள்ளன. இஸ்ரேல் அமெரிக்காவுடன் செய்து கொண்டுள்ளதுபோல் ''கேந்திர. ஒத்துழைப்பு'' ஒப்பந்தம் ஒன்றை அவர் சோவியத் அரசுடன் செய்து கொள்ளலாம் என்றும் ஹேஷ்யம் தெரிவிக்கப்படுகின்றது,

பாதுகாப்பு சபையில் இப்பொழுது விவாதிக்கப்படும் இஸ்ரேல் மீதான தீவிர பகிஷ்கரிப்பு தீர்மானத்தை அமெரிக்கா ஆதரிக்காது போனல் சிரியா மேற்குறித்தவாறு மாஸ்கோவுடன் ஒப்பந்தம் ஒன்றை செய்து கொள்வது தவிர்க்க முடியாதுபோகலாம். அந்த சமயம் தனது 'செல்லப் பிள்ளை' யான இஸ்ரேலை 'அம்போ' வென்று கைவிட்டு விடவும் அமெரிக்காவால் முடியாது இதற்கிடையில் பாதுகாப்பு சபையில் தனது தீர்மானம் முறியடிக்கப்படுமானல்இஸ்ரேலை தண்டிப்பதற்கு ஒருங்கிணைந்த தீர்மானம் ஒன்றை எடுப்பதற்காக 'அரபுலீக்' நாடுகளின் கூட்டமொன்றை அழைக்கப் போவதாகவும் சிரியா அச்சுறுத்தியுள்ளது.

சிரியாவின் திர்மானம் அவசரமாக வாக்கெடுப்புக்கு விடப்படுமானல் தனது தடை அதிகாரத்தைப் பிரயோகித்து அமெரிக்கா அதனை செல்லாக்காசாக்கிவிடமுடியும். அவ்வாறு செய்யப்படுமானல் தனது அரபு நண்பர்கள் மத்தியில் அமெரிக்கா மேலும் கசப்புணர்ச்சியை வளர்த்துக் கொள்வதாக இருக்கும்.

எனவே இந்தச் சங்கடமான நிலையில் இருந்து விடுபடுவதற்காக அமெரிக்கா என்ன செய்யப்போகிறது என்று இப்போதைக்குக் கூற முடியாது தான். ஆனல் அமெரிக்க வெளி உறவு அமைச்சர் மத்திய கிழக்கிற்கு விஜயம் செய்ய விருப்பது இந்த வகையில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தும் என்று கருத இடமுண்டு.

எவ்வாருயினும் இஸ்ரேலின் தான்தோன்றித்தனமான செயல்களைக் கட்டுப்படுத்தக் கூடிய செல்வாக்கு அமெரிக்காவிற்கே உண்டு. அதனைச் சற்று உறுதியாகப் பயன்படுத்துவதின் மூலம் உலக அபிப்பிராயத்துக்கு இஸ்ரேலை மதிப்பளிக்கச் செய்வது அமெரிக்காவிஞல் முடியாதகாரியமல்ல.

எங்களைப் பாதுகாப்பது யார்?

# இயற்கைப்பாதுகாப்புமுறை அதிசயமானவை

ஈமார் ஐம்பது வயது மதிக்கத்தக்க ஒருவர் தெருவைத் திடீரென அவதானமின்றிக் கடந்தபோது, வேகமாகவந்து கொண்டிருந்த ஒரு வாகனத்திஞல் மோதப்பட்டு விழுந்து போஞர். மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்பட்டபோது, ஒரு மணி நேரத்தில் இவர் மரணத்தைத் தழுவிக்கொண்டார். மரண விசாரணையின் போது இவரது முந்திய உடல்நலம் பற்றி இவரது மனைவியிடம் விசாரிக்கப்பட்ட போது, இவர் தனது வாழ்நாளில் எப்போதும் நோய் என்று பாயில் படுத்தது கிடையாது எனப் பொங்கி வரும் கண்ணீருக்கிடையில் அவள் குறிப்பிட்டாள். உயிருடன் இருந்த காலத்தில் இவர் உடலிலும் உள்ளத்திலும் மிகத் திடகாத்திரமானவராக இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. ஆயினும் அவரது உடல் பரிசோதிக்கப்பட்ட போது,

1. இரண்டு நுரையீரல்களும் காசநோய்வாய்ப்பட்டுக் குணமடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

2. ஈரலின் ஒரு பகுதி பழுதடைந்திருந்தமையால் குருதி தான் ஓடுவதற்குப் புதிய பாதைகளை அமைத்துக் கொண்டு ஈரலுக்கு மேலும் கீழுமாக ஓடியது.

3. இரண்டு சிறுநீரகங்களிலும் பழுதடைந்த பகுதிகள் காணப்பட்டனவாயினும் தொழில் செய்யக்கூடிய பகுதிகள் இன்னும் சேமிப்பில் இருந்தன.

4. நாடிகளின் சுவர்கள் பொதுவாகத் தடிப்படைந்திருந்தனவாயினும், இதயம் பருத்துச் சுற்ருேட்ட வேலையைச் சரிவர நடத்தத் தேவையான ஏற்பாடுகளைச் செய்திருந்தது.

5. நீண்டகாலமாக அவர் உயர் குருதி அழுக்கம் உடையவராக இருந்திருக்க வேண்டும் என அனுமானிக்கப்பட்டது.

இருந்தாலும் உடலில் நாலு பிரதான உறுப்புக்கள் பழுதடைந்த நிலையிலும் அதைப் பற்றி எதுவும் தெரியாமல், நல்ல திடகாத்திரமான உடலுடன் அவர் வாழ்ந்திருக்கிருர். ஓர் உறுப்பு பழுதடையுபபோது அதன் தொழிற்பாட்டை ஈடுசெய்வதற்கான நம்பமுடியாத பல அதிசய வழிகளை எமது உடல் உருவாக்கிக் கொள்ளுகிறது என்பதற்கு இந்த மனிதர் சிறந்த உதாரணமாகிருர்.

காலஞ்சென்ற டாக்டர் வால்டர் கனன் என்பவர் ஒரு முறை மனித உடலின் தொழிற்பாடுகள் பற்றியும் நலமாக இருப்பதற்கு அது கையாளும் முறைகள் பற்றியும் விபரமாக அறியும் போது ஒரு மனிதன் ஏன் நோய் வாய்ப்படுகிருன் என்றே வியப்படைய வேண்டி இருக்கிறது. என்று கூறினுர். ஆம்! அந்த அளவிற்கு எமது உடல் இயற்கையாகவே எமக்குப் பல பாதுகாப்புக்களைக் கொடுக்கிறது.

நல்ல உணவும் ஓய்வும் அமைதியான மன நிலையும் கிடைக்கப் பெற்ருல் தொண்ணூறு வீதமான நோய்கள் எந்த மருந்தும் இன்றித் தாமாகவே குணமடைந்து விடுகின்றன என்பது மருத்துவர்களுக்கு நன்கு தெரியும்.

### சேமிப்பு

அவசியம் நேரும் போது பாவிக்கப்படுவதற்கென எல்லா அங்கங்களும் 'சேமிப்புகள்' வைத்திருக்கின்றன. காசநோயுஞல் ஒரு மனிதன் பீடிக்கப்படும்போது அவனது நுரையீரலின் ஒரு பகுதி அழிந்து போகிறது என்பது உண்மைதான். ஆனலும் அவனது தேவைக்கு மேலதிகமான நுரையீரல் இழையம் அவனிடத்தில் காணப்படும். இந்தச் சேமிப்பு இழையத்தைப்பயன்படுத்தி இந்த மனிதன் தொடர்ந்து பல காலம் நல்ல உடல்நலத்துடன் சீவிக்கமுடியும். ஒரு பக்க நுரையீரலின் ஒருசிறு பகுதி மாத்திரமே நலத்துடன் நல்ல நிலையில் காணப்பட்ட ஒரு மனிதர் நாற்பது வருடங்கள் வரையில் கடுமையான வேலை செய்யும் நிலையில் வாழ்ந்த வரலாறுகளும் உலகில் உண்டு,

இரண்டினது வேலையையும் சேர்த்துச் செய்யும் என்பதை வைத்தியர் அறிந்திருப்பதாலேயே அவர் துணிவுடன் இந்தச் சிகிச்சையை மேற்கொள்கிருர். மிகச்சிக்கலான உள்ளமைப்புக்கொண்ட சிறுநீரகத்தின் பகுதிகள் யாவும் மீள அமைக்கப்படுகின்றன.

### ஆறுதல் படுக்கை

எமது உடல் மேற்கொள்ளுகிற இன்னெரு முக்கிய பாதுகாப்பு நடவடிக்கை ஓய்வெடுத்தலாகும். நீங்கள் உங்கள் முழங்கையையோ அல்லது

**கோகிலா மகேந்திரன்**

ஈரலில் கிட்டத்தட்ட ஐந்தில் இரண்டு பகுதி அகற்றப்பட்ட நிலையிலும் கூட, மிகுதி ஈரல் ஈரல் வேலை முழுவதையும் கொண்டு நடத்திவிடும் என்று பரிசோதனைகளில் இருந்து தெரியவந்திருக்கிறது. இருபத்தைந்து அடி வரையில் நீளமான எமதுசிறுகுடலில் மூன்று அல்லது நாலு அடி நீளமான பகுதி வெட்டி அகற்றப்பட்டாலும் அதுஅந்த மனிதனில் எந்தக் குறைபாட்டையும் தோற்றுவிப்பதில்லை.

பெரிய சத்திரசிகிச்சை ஒன்றினைச் செய்யும் வைத்தியர்' முப்பது அல்லது நாற்பது குருதிக் குழாய்களை வெட்டிக் கட்டுப் போடுவதைக் காணுகிற போது, இதனூடாகச்செல்லுகின்ற குருதிக்கு என்னநிகழப் போகிறது என்றுநாம் அதிர்ச்சி அடையலாம். ஆனல் எமது தேவைக்கு மேலதிகமாக இன்னும் பலநூறு இரத்தக்குழாய்கள் தொழிற்பாட்டில் இருப்பதால், ஒன்றுமே நடைபெருமல் அந்த மனிதன் பூரண குணமடைந்து விடுகிருன்.

பழுதடைந்த சிறுநீரகம் ஒன்று சத்திரசிகிச்சை மூலம் வெட்டி அகற்றப்படுவதை நாமெல்லாம் கேள்விப்பட்டிருக்கிறேம். ஒன்று அகற்றப் படும் போது மற்றைய சிறுநீரகம் தனது முந்திய அளவைவிட இரு மடங்கு பருத்து

மணிக்கட்டையோ சுளுக்கிக் கொண்டால் வைத்தியர் வந்து அந்தப் பகுதியை ஓய்வாக வைத்திருப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளைமேற்கொள்ள முன்னரே இயற்கை அவ்வாருன நடவடிக்கைகளைச் செய்து விடும். நீங்கள் சுளுக்கிக் கொண்ட பகுதி விறைப்பானதாகவும் வலியுள்ளதாகவும் மாறி நீங்கள் எவ்வளவு முயன்ருலும் அப்பகுதி அசைக்க முடியாமல் மாறிவிடுவதை நீங்கள் அதிகமாக அனுபவித்திருக்கலாம். உள ரீதியாகவோ அல்லது உடல் ரீதியாகவோ அளவுக்கு அதிகமாக நாங்கள் எங்களை வருத்திக்கொண்டால் இயற்கை உடனே ''பூரண ஓய்வெடு'' என்ற கட்டளையைத்தர நாங்கள் மய்க்கமடைகிறேம். ஆகவே சன நெரிசல், அதிக பசி அளலது தாகம், அதிர்ச்சி போன்ற காரணங்களினுல் மயங்கி விழுதல்கூட இயற்கை மேற்கொள்ளும் ஒரு பாதுகாப்புநடவடிக்கையே யாகும்.

[illegible]

எங்கள் தோலில் அழுக்கான ஆயுதத்திஞல் ஒரு காயம் ஏற்பட்டுவிட்டால் அப்பகுதியில் 'சிதல்' உண்டாவது நாம் எல்லாரும் அறிந்ததே, மனித உடலில் நடைபெறுகின்ற ஒரு

(5 ம் பக்கம் பார்க்க)

# பெருகிவரும் சனத்தொகை ஒரு பாரிய பிரச்னை

பெருகிவரும் சனத்தொகைப் பிரச்னை இன்றைய கால கட்டத்திற்கு உரிய கேள்விக்குறியல்ல. எதிர்காலத்தில் அதன் பாதிப்பையும் நாம் இன்றே கருத்தில்கொள்ள வேண்டும். இன்றைக்கு இருபது வருடங்களுக்கு முன்னர் இருந்த வாழ்க்கைத்தரம் 1970ம் ஆண்டில் இல்லை. 1970ம் ஆண்டில் நாம் அனுபவித்த தரம் 1980ல் இல்லை. இதற்கு காரணங்கள் பல்வேறு ருபங்களில் கூறப்பட்டாலும் அடிப்படைக் காரணம் மக்கட் தொகைப் பெருக்கம் என்பதனை யாரும் மறைக்கவோ மறுக்கவோ முடியாது.

**த. விவேகராச**

இந்தப் பிரச்னை பாரிய தொன்று என்பதனை எல்லோரும் ஏற்றுக்கொள்கின்றனர். இந்நிலையிலே மக்கட் தொகை பெருகிச் சென்ருல் இன்னும் சில ஆண்டுகளில் இலங்கை எப்படி இருக்கும்? அப்போது நமது நாடு எத்தகைய பிரச்னைகளுக்கு உட்பட்டிருக்கும்? அதனை மக்கள் இன்றே உணர வேண்டியவர்களாக இருக்கின்ருர்கள். இத்தகையதோர் உணர்வினையும், சிந்தனையையும் மக்களிடையே தூண்டும் முகமாக இலங்கை குடும்பத் திட்டச்சங்கம், குடும்ப நலக் கல்வியை நாடுபூராவும் நடாத்திவருகின்றது.

கிராமிய மட்டத்தில் குடும்ப நலக்கல்வியைப் பரவலாக்குவதற்கு கிராமிய குடும்பநலத் தொண்டர்கள் தீவிரமாக ஈடுபட்டுவருகின்றனர். இலங்கை குடும்பத்திட்ட சங்கம் முழுமையான தொண்டர் தாபனமாக இயங்கிவருகின்றது. அதன் செயல் திட்டங்கள் யாவும் கிராமிய நலத் தொண்டர் மூலமே நடைபெறுவதால் வடபிராந்தியத்தில் குடும்ப நலக்கல்வியை மேலும் பரவலாக்க புதிய திட்டங்கள் உருவாக்கி இந்தநாட்டில் திட்டமிட்ட ஆரோக்கியமான சமுதாயத்தினை உருவாக்க முயற்சிகள் நடைபெறுகின்றன,

தொண்டர்களின் முயற்சியிஞல் இந்த நாட்டில் ஆரோக்கியமான அறிவுள்ள சமுதாயம் உருவாகவும், நமது தாய் நாட்டின் சுபீட்சத்திற்காகத் திட்டமிடுவோம்.

கொக்காவில். சென்னை ரி. வி. ஏரியல் அமைப்புக்கு

வீனஸ் றெக்கோடிங் றேடியோ வாச்வேக்ஸ்

பெப்ரவரி மாதம் ஆரம்பமாகும் ரூபவாஹினி இலங்கை தொலைக்காட்சி ஒலிபரப்பை பார்த்து மகிழ்வதற்கான ரி. வி. ஏரியல் அமைப்புக்கும் பழுதடைந்த றேடியோ, மணிக்கூடுகளை திருத்திக் கொள்வதற்கும்; பழைய புதிய பாடல்களை பதிவு செய்வதற்கும் தொடர்பு கொள்ளுங்கள்.

VENUS RECORDING RADIO WATCH WORKS,

266/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். ஸ்ரீதர் தியேட்டருக்கு அருகாமையில்.

மிளகாய் பயிர்செய்கிறீர்களா?

அப்படியானல் குருமன் நோயை கட்டுப்படுத்த இன்றே பாவியுங்கள்

BAYER

பொலிமட் எல்.சி 50%

மேற்கு ஜர்மன் பாயர் ஸ்தாபனத்தின் புதிய தயாரிப்பு, ஒரு சிறந்த சர்வ பூச்சி நாசினி



நெல் · உருளைக்கிழங்கு · திராட்சை · புகையிலை · போஞ்சிவகை · தோடை · காய்கறி · பூஞ்செடி · பருத்தி · பயறுவகை · கோப்பி · வெங்காயம்

மேலும் பொலிமற், திரிப்ஸ், அழுக்கணவன், வெண் ஈ, சிற்றுண்ணி, போஞ்சி ஈ, தத்துக்கிளி துளை புழுக்கள், ஆகியவற்றை கீழ்வரும் பயிர்களில் திறமாக கட்டுப்படுத்தும்.

பொலிமற் பயிர்களை ஊக்கமாகவும், திடகாத்திரமாகவும் வளரச்செய்யும்.

பொலிமற் உடன் கெந்தகம் கலக்கப்படாது பயிர்களை பாதுகாக்க தாமதியாது பாவியுங்கள் பொலிமற்,

தயாரிப்பாளர்.


ஹேகெம் லிமிடெட்

400 டீன்ஸ் றேட் கொழும்பு-10

டெலிபோன் 93563 - 96331

Melville Assauw Designs

50 மி. லீட்டர் ரூபா 14-00
100 மி. லீட்டர் ரூபா 27-50
200 மி லீட்டர் ரூபா 52-50
450 மி. லீட்டர் ரூபா 110-00



அகில இலங்கைத் திராட்சைச் செய்கையாளர் சங்கம் அண்மையில் தெல்லிப்பழையில் அமைக்கப்பட்டது. சங்கத்தின் தலைவர் திரு. ராஜசேகரம், செயலாளர் திரு. இ. சபாரத்தினம். போஷகர்கள் முதலியார் வை. மகேசன், தொழிலதிபர்கள் திரு. க. கனகராசா. திரு. சி. பொ. நடராசா, பயிர்ச்செய்கை நிபுணர் திரு. சின்னையா மற்றும் முக்கியஸ்தர்கள் படத்தில் காணப்படுகிறார்கள்.

## மலே. அமைச்சர் எப்படித் தப்பினர்?

### அவரே கூறுகின்றார்

கோலாலம்பூர், ஜன. 12

''விபத்துக்குள்ளான விமானத்தை நான் ஓட்டிச்செல்லுகையில் திடீரென என் முன்னே மரங்கள் தெரிந்தன. இதையடுத்துப் பாதுகாப்புப் பட்டிகளை அகற்றிவிட்டு நான் விமானத்தைவிட்டு வெளியே குதித்தேன். அப்போது காலில் சிறு காயங்கள் ஏற்பட்டன.''

இவ்வாறு விபத்துக்குள்ளான விமானத்திலிருந்து அதிசயிக்கத்தக்கவிதத்தில் உயிர் தப்பிய மலேசிய வெளிநாட்டு அமைச்சர் ஜனுப் ஷாபி தெரிவித்தார்.

ஜனுப் ஷாபி மேலும் தெரிவித்ததாவது:

''என்னைப் போலவே என்னுடன் விமானத்தில் பயணம் செய்த மூவரும் வெளியே குதித்தனர். அவர்களின் நிலை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. நிலத்தில் குதித்தபோது எனக்குக் காலில் சிறு காயங்கள் ஏற்பட்டன.

''அடுத்து ஒரு கிராமத்தை நோக்கி நடந்துசென்றபோது மலை இடுக்குகளில் அகப்பட்டுக்கொண்டேன். எனினும் மீட்புப் படையினர் என்னை அந்த இடுக்கிலிருந்து காப்பாற்றினர்கள்.'' (இ)

கம்பர்மலை அறுவர் கொலை வழக்கு;

## ''எதிரிகள் ஆறுபேரும் வீட்டிற்கு வந்தபோது அடையாளம் கண்டேன்''

### குடும்பத்தலைவர் நாராயணசாமி சாட்சியம்

(புலோலி)

''கொலையுண்ட அறுவரினதும் பிரேதங்களை நானும் எனது மகன் அழகேஸ்வரனும் பிரேத பரிசோதனையின்போது அடையாளம் காட்டினேம். சம்பவ நேரம் கண்டவற்றைப் பொலிசாருக்கு வாக்கு மூலத்தில் தெரிவித்தேன்.

இவ்வாறு கம்பர்மலை அறுவர் கொலைவழக்கு விசாரணையில் தொடர்ந்து சாட்சியமளித்த கொலையுண்ட அறுவரின் குடும்பத்தலைவனை கந்தையா நாராயணசாமி சொன்னார்.

பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் இக்கொலை வழக்கு விசாரணை செய்யப்பட்டு வருகின்றது.

பொலிசார் சார்பில் சார்ஜன்ட் பொன்னையாவும்பொலிசாருக்கு உதவியாகச் சட்டத்தரணிகளான எம். வேலும் மயிலும் ஆர். டி. இரத்தினசிங்கம் ஆகியோரும் எதிரிகள் சார்பில் சட்டத்தரணிகளான எம். மோதிலால் நேரு ஆகியோரும் ஆஜராகி இருந்தனர்.

தொடர்ந்து சாட்சியமளித்த நாராயணசாமி குறிப்பிட்டதாவது: சம்பவநேரம் எனது வீட்டில் இரண்டு லாம்புகள் எரிந்து கொண்டிருந்ததாகக் கூறியுள்ளேன். நானும் இரண்டு பிள்ளைகளும் படுத்திருந்த இடத்தில் நிலத்தில் ஒரு லாம்பும் குழந்தை கிடந்த தொட்டிலடியில் கம்பியில் தூக்கப்பட்டபடி ஒரு லாம்பும் எரிந்து கொண்டிருந்தன. யோகானந்தன் கட்டிலிலும் மற்றவர்கள் நிலத்திலும் படுத்திருந்தார்கள்.

எதிரிகள் ஆறுபேரும் சம்பவ தினமிரவு எனது வீட்டிற்கு வந்தபோது நான் அவர்களை அடையாளம் கண்டு கொண்டேன், அவர்களை நான் முன்பே நன்றாக அறிந்திருந்தபடியால் அவர்களை அடையாளம் காணக்கூடியதாகவிருந்தது, அந்த நேரத்தில் இரண்டு லாம்புகளும் எரிந்தபடியே இருந்தன.

சம்பவ நேரம் தட்டியைக் கிளப்பிக் கொண்டோடிய நான் மீண்டும் வீட்டிற்குத் திரும்பி வந்தபோது அங்கு பருத்தித்துறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. எஸ். திருச்சிற்றம்பலம் நின்றார், பொலிஸ் சுப்பிரின்டன்போல ஒருவரும் நின்றார். அவர் பொலிஸ் சுப்பிரண்டனே என்பது எனக்குத் தெரியாது.

வீட்டிலிருந்த இரண்டு லாம்புகளையும் பொலிஸ் உத்தியோகத்தர் பாரமெடுத்தார். அவர் அந்த லாம்புகளை இன்ஸ்பெக்டர் திருச்சிற்றம்பலத்திடம் கொண்டுபோய் வைத்ததைக் கண்டேன். எனது குடும்பத்தவர் அறுவரும் இறந்து விட்டமையினுல் கவலையில் இருந்த நான் பின்பு அந்த லாம்புகளுக்கு என்ன நடந்தது என்பதைக் கவனிக்கவில்லை.

சம்பவநேரம் நானும் மகள் காஞ்சனு தேவியும் நித்திரை விட்டெழுந்து விட்டோம். காஞ்சனுதேவி ஏதோ வெடிச்சத்தம் கேட்பதாகச் சொன்னுர் எனக்கும் அவ்வெடிச்சத்தம் கேட்டது. ரோகிணி அம்மா வீட்டுப்பக்கமாக அந்த வெடிச்சத்தம் கேட்டது.

பின்பு எங்கள் வீட்டுப்படலையிலும் துவக்கு வெடிச்சத்தம் கேட்டது.

கொலையுண்ட அறுவரினதும் பிரேத பரிசோதனை நடந்தபோது நான் சமூகமாக விருந்தேன். பிரதேபரிசோதனையின் போது நானும் எனது மகன் அழகேஸ்வரனும் தாயார் அழகம்மா மனைவி அழகம்மா. மகன் கருணேஸ்வரன், மகன் சாந்தேஸ்வரன், மகள் ஜெயநாயகவதி, மருகமகன் யோகாகானந்தன் ஆகிய அறுவரது சடலங்களையும் அடையாளம் காட்டினேம்.

இறந்தவர்களின் மரண விசாரணையின்போது நான் சாட்சியமளித்தேன். சம்பவ தினம் கண்டனவற்றைப் பொலிசாருக்கு வாக்கு மூலமாகக் கொடுத்தேன். 26ம் திகதியே நான் பொலிசாருக்கு வாக்கு மூலம் கொடுத்தேன். (க)

## கடத்தல் முறியடிப்பு

(மன்னார்)

எருக்கலம்பிட்டியில் வைத்து இந்தியாவுக்குக் கடத்திச் செல்லவிருந்த 400 வெளிநாட்டுக் குடைகளை மன்னார் பொலிசார் கைப்பற்றினர்.

இரகசிய தகவல் ஒன்றையடுத்து எருக்கலம்பிட்டியில் உள்ள வீடொன்றை மன்னார் பொலிசார் சோதனையிட்டபோதே இந்தியாவுக்குக் கடத்திச் செல்லப்படவிருந்த 400 வெளிநாட்டுக் குடைகள் கைப்பற்றப்பட்டன.

## ''வாக்குமூலம் வாசித்துக் காட்டப்படவில்லை''

(புலோலி)

''இக் கொலைச் சம்பவத்தில் நான் பொலிசாருக்கொடுத்த வாக்கு மூலத்தில் ஆறுபேரைக் கொடுத்தேன். அவ்வறுவரில் இறந்த மூவரையும் விட உயிருடன் இருக்கும் மூவரையும் தவிர வேறுமொருவர் எதிர்க் கூண்டில் இன்று இருக்கிறார். அவரது பெயரை நான் பொலிசாருக்குக் கொடுக்கவில்லை.

இவ்வாறு கம்பர்மலை அறுவர் பயங்கர துப்பாக்கிச் சூட்டுக் கொலை வழக்கில் சாட்சியமளித்த கொலையுண்ட குடும்பத் தலைவர் கந்தையா நாராணசாமி எதிரிகள் சார்பில் ஆஜரானசட்டத்தரணி மோதிலால் நேருவினுல் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது குறிப்பிட்டார்.

இக்கொலைவழக்கு விசாரணை பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டுவருகின்றது. சாட்சி தொடர்ந்து சட்டத்தரணி மோதிலால்நேருவினுல் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

சட்: நீர்நீதிமன்றத்திற்குப் பலதடவைவந்துள்ளீர்? ஆம்.

சட்; பலதடவை எதிராளியாக வந்தீர்? — ஆம்.

சட்; பலதடவைகள் நீதிமன்றத்தால் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளீர்? — இல்லை.

சட்; சிலதடவைகள் குற்றவாளியாகக் காணப்பட்டீர்? ஆம்.

சட்: எத்தனை தடவைகள் குற்றவாளியாக் காணப்பட்டீர்? — ஞாபகமில்லை. இரு தடவைகளாக இருக்கலாம்,

சட்: ஒருதடவை உங்கள் சொந்தப் பேத்தியின் காலை அடித்து முறித்த குற்றத்தில் நீதிமன்றத்தால் குற்றவாளியாகக் காணப்பிட்டீர்? ஆம்.

சட்: உமது பேத்தியின் பெயர்? தையல்நாயகி

சட்: அடுத்து எந்தக் குற்றச்சாட்டில் குற்றவாளியாகக் காணப்பட்டீர்? களவாக எரு அள்ளியதாகத் தொடரப்பட்ட வழக்கில்.

சட்: ஒருதடவை ஓலைக்கு நெருப்பு வைத்தீரா? இல்லை.

சட்: தமிழில் எழுதப்பட்ட வாக்குமூலம் உமக்கு வாசித்துக் காட்டப்பட்ட பின்தான் கையெழுத்துவைத்தீர்? வாக்கு மூலம் வாசிக்கப்படவில்லை. எழுதிய பொலிஸ் உத்தியோகத்தரை நம்பித்தான் கையெழுத்து வைத்தேன்.

சட்; நீர் கொடுத்த வாக்கு

(5ம் பக்கம் பார்க்க)

13ம் திகதி மட்டும்
வெஸ்லி மானிப்பாய்
தினசரி: 4.45 7.15 9.15
Ulsanas Raid
14—20 வரை
எங்க பாட்டன் சொத்து

5 வது-மகளிர் வாரம்
ஹரன் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன்—ஸ்ரீதேவி
நீல மலர்கள்

லிடோ யாழ். நகர்
தினசரி 10.30, 2.15, 4.45, 7.15, 9.30
DEATH DEMENTION

வெலிங்டன்
[யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
அன்னப்பறவை

Regal Cinema
D ily 10—30, 2—15, 4—30, 7—00, 9—30
GENE WELDEK in
SILVER STREAK
(Color)

ராணி (யாழ்.நகர்)
தினசரி 10.30, 2.30, 6.15 9.30
சிவாஜி
லட்சுமி
தங்கைக்காக

ஸ்ரீதர் தினசரி: 10:30, 2:15, 4:30,
யாழ். நகர் 7:00, 9:30
COUNTESS DRACULA
(ADULTS ONLY

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 10—30, 2—30, 6—30, 9—30
சிவாஜி—கே. ஆர். விஜயா நடித்த
நான் வாழவைப்பேன்

இன்று 118-வது தினம்
சாந்தி (யாழ்.நகர்) தினசரி 10—30, 2—30,
தொலைபேசி;7642 6—15, 9—45
கமல்—ஸ்ரீதேவி—முத்துராமன்
மேஜர்— நடித்த
குரு
(ஈஸ்ட்மன் கலர்)
யாழ். நகரில் மிகுந்த பரபரப்பூட்டி காட்சியளிக்கிறது

ராஜா (யாழ். நகர்)
சரஸ்வதி [திருமலை]
தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த்—ஸ்ரீதேவி—சக்கரவர்த்தி—லட்சுமிஸ்ரீ
தர்ம யுத்தம் (ஈஸ்ட்மன் கலர்)

வின்சர்
(யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
... ராதிகா
நிறம் மாறுத பூக்கள்
[இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புதிய பிரதி]
இன்னும் சில தினங்கள் மட்டும்
யாழ். நகரில் இதுவே கடைசிமுறையாகக் காண்பிக்கப்படுகிறது.

உலகப் பிரசித்தி பெற்ற
German TV
NORDMENDE
COLOUR TV with MANUAL AS WELLAS TELE CONTROL
பலதரப்பட்ட அளவுகளில் தூரதிருஷ்டிக் கட்டுப்பாட்டுக் கருவியுடனும் கருவிஇல்லாமலும்
யாழ்நகரில் பெற்றுக்கொள்ள
A BAUR & CO LTD (JAFFNA BRANCH)
மற்றும்
விவசாய இரசாயனப்பொருட்கள் ★ AGRO CHEMICALS
மருந்து வகைகள் ★ DRUGS
தெளிகருவிகள் ★ SPRAYERS
இயந்திர தெளிகருவிகள் ★ POWER SPRAYERS
உர வகைகள் ★ FERTILIZERS
ஒவல் ரின் ★ OVALTIN
ஒவா மில் ★ OVAMIL
Honda மோட்டார் சைக்கிள் ★ HONDA MOTOR CYCLES
வினியோகஸ்தர்கள் AUTHORIZED DISTRIBUTORS FOR
★ அரச மருந்து கூட்டுத்தாபனம் ★ STATE PHARMACUTICAL CORPORATION
★ இலங்கை ஒட்டுப்பலகை கூட்டுத்தாபனம் ★ CEYLON PLY WOOD CORPORATION
★ இலங்கை தோல் கூட்டுத்தாபனம் ★ CEYLON LEATHER CORPORATION
விபரங்கட்கு:
ஏ பவர் அன் கோ லிமிட் (யாழ்ப்பாணக் கிளை)
இல. 5, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
A. Baur & Co Ltd. (JAFFNA BRANCH)
No. 5, CLOCK TOWER ROAD, JAFFNA,
T—Phone: 7651 — 7156
(1957)

# இன்றைய பலன்

மார்கழி மாதம் 29 ம் திகதி
புதன்கிழமை
(13—1—82)

மேடம்: தெளிந்த மனம் தெய்வ குரு பக்தியுடன் தேடியது கிடைக்கும். பரோபகார சிந்தை வளரும். பொதுப் பணியை நாடுவீர். பெரியோர்கள் ஆதரவு இன்று தப்பாமல் கிடைக்கும்.

இடபம்; இடமாற்றத்துக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம். சிலருக்கு வெளியூர் பயணத்திற்கு இடமேற்படும். தொழில்துறையில் வெற்றிகள் கிடைக்கும். உற்சாகமான தினம்.

மிதுனம்: புதிய கோணத்திலிருந்து பொருள் வரவுக்கு இடமுண்டு; துணிவையே துணையெனக்கொண்டு காரியங்கள் சிறப்பாகச் செய்வீர்கள். பொதுசன தலைமையுடன் புகழும் தேடிவரும்.

கடகம்: எதிலும் மந்தநிலை தென்படும். சிலருக்கு உடல் நலம் பாதிக்கப்படலாம். விவசாயிகள் வாழ்க்கையில் நஷ்டத்திற்கிடமுண்டு. சிந்தனையில் சூழ்ச்சியில் சிக்கித்தவிப்பீர்கள். துக்கமான தினம்.

சிங்கம்: பிரயாணத்தில் பொருள் நழுவக்கூடும். திருடர் பயத்திற்கும் இடமுண்டு. விவசாயிகள் முன்னெச்சரிக்கையுடன் இருக்கவும். காணிப் பிணக்கு கவலையைத்தரலாம். அவசரப்புத்தியினால் விபரீதங்கள் விளையும். கோபத்தை அடக்கின் நிலைமை சீராகும்.

கன்னி: குடும்ப வாழ்க்கை மகிழ்ச்சிகரமாக இருக்கும். உறவினர் ஒருவரின் வருகை உற்சாகத்தை அளிக்கும். எதையும் அலசிஆராய விரும்புவீர்கள். பூமியால் அதிக லாபம் கிடைப்பதற்கு இடமுண்டு.

துலாம்: அமைதிக்குப் பங்கம் ஏற்படும் சம்பவங்கள் இடம்பெறலாம். நெருங்கிய உறவினர் ஒருவருடைய உடல் நலம் பாதிக்கப்படலாம். வைத்தியச் செலவுக்கு இடமுண்டு. நிதானம் வேண்டும்.

விருட்சம்; வாகன சுகத்துடன் வாழ்க்கை நலன் வந்து சேரும். தாய் வழி தனத்துடன் தன்மானம் தலை தூக்கும். மாணவர்களாயின் கல்வியில் முன்னேற்றம் உண்டு.

தனு: வரவேற்கவேண்டிய சம்பவங்கள் இடம்பெறும். புத்திரர்களால் பெரும்மகிழ்ச்சிக்கு இடமுண்டு. உள்ளத்தில் உவகை துள்ளும். பெரிய இடத்துத் தொடர்பு உங்களுக்குப்பெருமையைத்தரும்.

மகரம்: தூரத்துப் பயணம் துயரத்தைத் தரலாம். வருமானத்தில் வீழ்ச்சி தென்படும். இன்று சிறு வருத்தம் வரினும் பெருமுறையில் கவனிக்கப்படவேண்டும். சிலருக்கு அன்னிய வாசமும் அகால போசனமும் உண்டு.

கும்பம்: எண்ணம்போல் வாழ்வு இன்று மலரும். மற்றவர்கள் மெச்சும்வண்ணம் கடமையாற்றுவீர்கள். இதயத்துக்கு இதம் அளிக்கக்கூடிய பரிசும் கிடைக்கலாம். வேண்டியவர்களின் ஆதரவும் பெருகும்.

மீனம்: அரசு பயத்திற்கு இடமுண்டு. வழக்கு விவகாரங்களில் மாட்டிக்கொள்ள வேண்டாம். மின்னியல்பொறியியல் பகுதிகளில் கடமையாற்றுபவர்கள் மிகவும் கவனம் செலுத்த வேண்டும்.

சோதிடக் கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

# சங்கிலி அறுக்க முயற்சி: ஒத்திவைக்கப்பட்ட 6 மாதச் சிறை

(புலோலி)

ஆலயத்திற்குச் சென்று வீடு திரும்பிக்கொண்டிருந்த இளம் பெண்ணின் தங்கச்சங்கிலியை அறுக்க முயன்ற இளைஞருக்கு 5 வருடத்திற்கு ஒத்திவைக்கப்பட்ட 6 மாதச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது

தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்திற்குச் சென்று வணங்கிவிட்டு, வீடு திரும்பிக்கொண்டிருந்த இளம்பெண்ணிடம் தங்கச் சங்கிலியை அறுக்க முயன்றாரெனக் குற்றஞ்சாட்டி, வல்வெட்டித்துறைப் பொலிஸார் எஸ். ஹமீத் என்பவருக்கு எதிராக வழக்குத் தாக்கல்செய்திருந்தனர்.

சந்தேகநபர் ஹமீத் பருத்தித்துறை நீதாவன் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் ஆஜராகிக் குற்றத்தை ஒப்புக்கொண்டார். நீதவான் எதிரிக்கு 5 வருடத்திற்கு ஒத்திவைக்கப்பட்ட 6 மாதச் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார், (க)

# ஈழத்து எழுத்தாளருக்கு கௌரவம்

(புலோலி)

தமிழ்நாட்டிலுள்ள சென்னை நர்மதா வெளியீட்டகம் ஈழத்து எழுத்தாளரான தெணியானின் 'கழுகுகள்' என்னும் நாவலை கடந்த நவம்பர் மாத வெளியீடாக வெளியிட்டுள்ளது.

யாழ்ப்பாணத்துக்கிராம வாழ்க்கையில் நிலவுடமைச் சமூக அமைப்பினால் குடும்பங்கள் எவ்வாறு சிதைவுறுகின்றன என்பதைச் சித்தரிக்கும் இக்கழுகுகள் நாவல் 176 பக்கங்களைக் கொண்டுள்ளது.

# 7 தொழிற்சங்கங்களின் உண்ணாவிரத முயற்சி

(கொழும்பு)

ஏழுஎதிரணித் தொழிற்சங்கங்களின் உண்ணாவிரதம் இம்மாதம் 26 ம் திகதிநடைபெறவுள்ளது.

1980 ஜூலை மாதம் வேலைநிறுத்தம் செய்தவர்களை மீண்டும் வேலைக்கு எடுக்கக் கோரியே இந்த உண்ணா விரதப்போராட்டத்தை ஏழு எதிரணித் தொழிற்சங்கங்களும் நடத்தவுள்ளன.

இத்தொழிற்சங்கத்தினரின் உண்ணாவிரதம் யாழ்ப்பாணம் கண்டி, குருநாகல், களுத்துறை, காலி, இரத்தினபுரி, மாத்தறை ஆகிய இடங்களில் இம்மாதம் 26 ம், 27 ம், 28ம் திகதிகளில் இடம்பெறவுள்ளது. (வெ)

வடமாகாண மக்களின் அபிமானத்தைப் பெற்ற நிறுவனம் ——————————.
உங்கள் பழுதடைந்த மணிக்கூடுகளை நல்லமுறையில் திருத்திக் கொள்வதற்கும்; அசல் இங்கிலிஷ் உப உறுப்புக்களை பொருத்திக் கொள்வதற்கும் நம்பகமான ஒரே நிறுவனம்.

# டில்கா வாச் வேக்ஸ்

பஸ் நிலையம் முன்பாக
202, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 8174.

DILKA WATCH WORKS — OPPOSITE BUS STAND JAFFNA.

## தேவை

நல்ல நிலையில் உள்ள அல்லது
**புதிய தறப்பாள் தேவை. நீளம் 45' அகலம் 15'**
தொடர்புகொள்ளவும்

**பொதுமுகாமையாளர்,**
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், நெடுந்தீவு.
-1952

## விற்பனையாளர் தேவை

கொழும்பிலுள்ள பிரபல்யமான நகைக்கடைக்கு மூன்று பாஷையும் தெரிந்த அனுபவமுள்ள விற்பனையாளர் உடன் தேவை. இருப்பிடவசதி உண்டு. நற்சான்றுகளுடன் நேரில் வரவும்.

**வைரமாளிகை,**
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்
1956

## தேங்காய் விற்பனை

மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான கண்டி வீதி, பளை 173ம் மைல்கல்லுக்கு அருகாமையில் உள்ள தர்மக்கேணி—கரந்தாய் தோட்டத்தில் சுமார் 15,000 தேங்காய்கள் உடன் விற்பனைக்குண்டு: மேற்படி தேங்காய்களை தோட்ட அத்தியட்சகரின் அனுமதியுடன் எல்லா வேலை நாட்களிலும் பார்வையிடலாம். தங்கள் கேள்வி விண்ணப்பங்களை கீழ்க்காணும் விலாசத்திற்கு 1000 தேங்காய்கள் கழிவில்லாமல் என்ன விலை என்பதை தெரியப்படுத்தி உடன் அனுப்பிவைக்கவும். கேள்வி விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் பட்சத்தில் தேங்காய்க்கான முழுத்தொகையும் மேற்படி தேங்காய்களை அப்புறப்படுத்துமுன் செலுத்தப்படல்வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதி; 20—01—1982
விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:

**THe Manager,**
J. E, D. B. Regional Office,
165, Puttalam Road Chilaw. 1950

''சமாதானத்தை உங்களுக்கு வைத்துப் போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிற பிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக.''

—இயேசு கிறிஸ்து

## இன்றே

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகளடங்கிய புஸ்தகங்களையும், பிரதிகளையும் இலவசமாகப் பெற்றுக்கொள்ளுங்கள்.

தொடர்புகொள்ளுங்கள்:

**கிறிஸ்தவ தொடர்புகள்**

**வண. ஆர். துரைராஜா,**

**உடுவில், சுன்னாகம்.**
1947

## பின்னுறுதிக்கட்டளைபற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

மரணம் எய்திய கோண்டாவில், புகையிரத நிலைய வீதி வேலாயுதர் ஐயாத்துரை அவர்களின் மரணசாதனச் சொத்து வகையில் மரணமெய்தியவர்.

ஐயாத்துரை பொன்னுத்துரை, புகையிரத நிலைய வீதி, கோண்டாவில்.

மனுதார்

வழ. இல:
தத்துவம்/ 3348

எதிராக

1. குலசேகரம் சண்முகலிங்கமும்
2. பெண் ருஜிவியும் இருவரும் புகையிரத நிலையவீதி, கோண்டாவில்.

எதிர்வாதிகள்

மேலே இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே குறிப்பிட்ட இறந்து போனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேலே நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள எவரேனும் 1982 ம் ஆண்டு தை மாதம் 15 ந் திகதி முற்பகல் 9.00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுன தாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றது.

1981 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 6 ந் திகதி இந்நீதிமன்ற கட்டளைப்படி என்னால் வரையப்பட்டது.

**தா. குலரு[illegible]ம்**
பதிவாளர்.

சி. சிதம்பரநாதன்
மனுதாரின் சட்டத்தரணி
1958

## வெற்றுச் சாக்கு விற்பனை

நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் சுமார் 3000 வெற்றுச் சாக்குகள் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்குண்டு. இவற்றிற்கான விண்ணப்பங்கள் யாவும் சங்கத்தில் ரூபா 3/50 செலுத்திப் பெறப்பட்ட விண்ணப்பப் படிவங்களை பூரணப்படுத்தி பதிவுத்தபாலில் 30—1—82 நண்பகல் 12—00 மணிக்கு முன்னதாக செயலகத்தில் கிடைக்க வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'வெற்றுச் சாக்கு' எனக் குறிப்பிடப்பட்டு 'தலைவர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், நெடுந்தீவு.' என விலாசமிட்டு அனுப்பப்படல் வேண்டும். வைப்புப் பணம் ரூபா 300/— ஆகும்.

**க. கே. பாலபிள்ளை**
பொதுமுகாமையாளர்,
ப. நோ. கூ. சங்கம்,
1953 நெடுந்தீவு.

## வாக்குமூலம்...

(3 ம் பக்கத் தொடர்ச்சி)

மூலம் பதிவுசெய்யப்பட்டது பற்றி நீர் வாசித்துப் பார்க்கவில்லை? எழுதப்பட்ட பின் எழுதிய பொலிஸார் கையெழுத்துப் போடுமாறு கேட்டார். நான் கையெழுத்துப் போட்டேன்.

சட்: நீர் முதல் கொடுத்த வாக்குமூலத்தில் யார்யாரைக் கொடுத்தீர்? தங்கராசா, அப்புத்துரை, தேவராசா, துரைராசா, தில்லைநடராசா, மகேந்திரன் ஆகிய அறுவரையும் குறிப்பிட்டேன்.

சட்: எதிரிகள் அறுவரில் மூவர் இறந்துவிட்டனர்? ஆம்.

சட்; ஆறு எதிரிகளில் இறந்த மூவரையும், ஏனைய மூவரையும்விட இன்னுமொருவர் எதிரிக்கூண்டில் இருக்கிறார்; ஆம்.

சட்: அவருடைய பெயரை நீர் பொலிசிற்குக் கொடுக்கவில்லை: கொடுக்கவில்லை.

சட்: அவருடைய பெயரை நீர் பொலிசுக்குக் கொடுக்காததற்குக் காரணம் நீர் அவரை அங்கு காணவில்லை? ஆம்.

(மேல் விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது.?

## இயற்கைப்...

(2 ம் பக்கத் தொடர்ச்சி)

மிக விசித்திரமான— அதே நேரம் மிக முக்கியமான ஒரு நிகழ்வின் பெறுபேறே இந்தச் 'சிதல்' ஆகும்.

அந்தக் காயத்தில் தொற்றிக்கொண்ட பற்றீரியா போன்ற நுண்ணுயிர்களை எதிர்த்துப் போரிடுவதற்காக அந்த இடத்திற்கு ஏராளமான வெண்குருதிச் சிறு துணிக்கைகள் குருதி அருவியினால் கொண்டுவரப்படுகின்றன. இப்போராட்டத்தில் இறந்த பற்றீரியங்களும் இறந்த வெண்குருதிச் சிறு துணிக்கைகளுமே 'சிதல்' ஆக வெளித்தள்ளப்படுகின்றன, வெளியிலிருந்து தாக்குகின்ற பற்றீரியங்களுக்கும் உள்ளே உள்ள குருதியோட்டத்திற்கு மிடையில் ஒரு பாதுகாப்புச் சுவராக இந்தச் சிதல் விளங்கும். எமது உடல் நல்ல முறையில் தொழிற்படுவதற்காக இயற்கை மேற்கொள்ளுகின்ற மிகத்திறமையான முறைகளில் சிலவற்றை மாத்திரம் மேலோட்டமாக மேலே பார்த்தோம். வைத்தியர்கள் இந்த இயற்கை முறைகளைப் பிரதி பண்ணி நோய்களுடன் போராடமுயன்று வருகிறார்கள். அல்லது இந்த முறைகளுக்குப் பிரதியீடு செய்கிறார்கள். ஆம்! இயற்கையின் மிக நுணுக்கமான பாதுகாப்பில் இருந்து வரும் எங்களுக்கு நோய் வராதிருப்பது அதிசயமல்ல. நோய்வருவதே அதிசயமாகும்.

(ஆதாரம்— றிச்சாட். சிகபற் றசல். எல். டிச்

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

சொந்தப் பாவிப்பிலுள்ள 1300—1971 தொடர் 8ஸ்ரீ5244 இலக்கமுடைய வெள்ளைநிற வோக்ஸ்வேகன் கார் உடனடியாக விற்பனைக்குண்டு. தொடர்புகொள்க: காராளசிங்கம், 84, கச்சேரி — நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
1962

யாழ்ப்பாணம், 121, சென் பற்றிக்ஸ் வீதியில்உள்ள மாடிவீடும், ஒன்றேகால் பரப்பு ஆதனமும் சகல வசதிகளுடனும் உடன் விற்பனைக்கு உண்டு. கா. சி. செ. முத்துக்குமாரு பிரசித்தநொத்தாரிஸ், 121, முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம், தொலைபேசி: 7460. 1955

கொழும்புத்துறையில் துண்டி வீதிக்கு அருகாமையில் பிரதான வீதியில் 2 1/2 பரப்பு காணிவிற்பனைக்குண்டு. விபரங்களுக்கு தி. பொன்னுத்துரை, 546, குமிழமுனை, பல்லவராயனகட்டு. 1959

சாவகச்சேரி, கண்டி றோட்டில் சந்தையிலிருந்து 50 யார் தூரத்திற்குள் உளள இரண்டு கடைகள விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: தேவபாலன், சோமசுந்தரம் அவனியு, சுண்டிக்குளி. 1961

### வாடகைக்கு

யாழ். இந்துக் கல்லூரிக்கு அண்மையில கஸ்தூரியார் வீதி கல்லூரி வீதிச் சந்தியில, மூன்று கடைகள் பொறணையுடன வாடகைக்குண்டு. தொடர்புகொள்க: 198, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
1954

### ஒத்திக்கு

சாவகச்சேரியில் ஒத்திக்கு வீடு கொடுப்பதற்கு உண்டு. தொடர்புகொளக. ரவீந்திர அகம், டச் றோட், சாவகச்சேரி.
1951

## சுழிபுரம் வாசிகசாலை

(சுழிபுரம்)

சுழிபுரம் கிராம உபஅலுவலகம் நடாத்திவரும் பொதுசன வாசிகசாலை, வேலைநாட்களில் தினமும் பிற்பகல் இரண்டு மணி முதல் இரவு எட்டு மணிவரையும், விடுமுறை நாட்களில் முழுநேரமும் திறந்து நடாத்த நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது. வாசிகசாலை மண்டபத்திற்கு மின்வெளிச்சம் பொருத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(அ

## பரு. லயன்ஸ் ஆதரவில்
# 31ம் திகதி 27 பேருக்கு இலவச கண் சத்திரசிகிச்சை

(புலோலி)

பருத்தித்துறை லயன்ஸ் கழகம் கடந்த மாதம் நடத்திய கண் சிகிச்சை முகாமில் சத்திர சிகிச்சை மேற்கொள்வதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 27 பேருக்கும் இம்மாதம் 31ம் திகதி மந்திகை அரசினர் வைத்தியசாலையில் சத்திர சிகிச்சை மேற் கொள்ளப்படவுள்ளது.

கண் சத்திர சிகிச்சைமேற் கொள்வதற்குத் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் சத்திர சிகிச்சைக்கான தேக ஆரோக்கியத்துடன் இருக்கின்றார்களா என்பதைப் பரிசோதிப்பதற்காகவும் மேற்கொண்டு அவர்களுக்கு மருந்து வகைகள் கொடுப்பதற்காகவும் 23ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு வீரவாகு கட்டிடத்திற்கு வருமாறும், தெரிவு செய்யப்பட்டு மந்திகை அரசினர் வைத்தியசாலையில் கண் சத்திர சிகிச்சை பெறவுள்ள நோயாளர்கள் இம் மாதம் 30ம் திகதியே மந்திகை அரசினர் வைத்தியசாலைக்கு வந்து சேரவேண்டுமெனவும் பருத்தித்துறை லயன்ஸ் கழகத்தலைவர் திரு எஸ். சிவராசசிங்கம் அறிவித்துள்ளார்.

பருத்தித்துறை லயன்ஸ்கழகம், மந்திகை அரசினர் வைத்தியசாலை, கண்வைத்திய நிபுணர் ஆகியோர் இணைந்து இக் கண் சத்திர சிகிச்சையை மேற்கொள்கின்றனர்.

பருத்தித்துறை லயன்ஸ் கழகம் வடமராட்சிப் பகுதி மக்களின் நன்மை கருதி அண்மையில் இந்தியாவிலிருந்து கண் வைத்திய நிபுணர் குழுவொன்றை அழைத்து கண் சிகிச்சை முகாமொன்றை நடத்தியதும் குறிப்பிடத்தக்கது.

## நியமனம் வழங்கப்படவில்லை

(வவனியா)

வவனியா மாவட்டத்தில் விசேட சேவை அதிகாரிகள் எவரும் நியமிக்கப்படவில்லை, என்று அரசாங்க அதிபர் திரு. கே. சி. லொகேஸ்வரன் தெரிவித்தார்.

## உலகமததினம்

(வவனியா)

உலகமததினம் 7 ம் திகதி கொழும்பில் பண்டாரநாயக்கா சர்வதேச மகாநாட்டு நினைவு மண்டபத்தில் அனுஷ்டிக்கப்படவுள்ளது. சகல மத தாபன அறிஞர்களும் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர்.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

# ஹோம் பிரின்ஸ்

லிமிட்.

**திறமைமிக்க டெலிவிஷன்**

SANYO — T. V. BLACK AND WHITE

திரை 14''. 20''

**திடகாத்திரமான**

PHOENIX — CHINESE

**சைக்கிள்கள் (HELMET- தொப்பிகள்)**

**'HOME MATE' வீட்டுப் பாவனைக்குகந்த**

**மணிக்கு 1000 கலன் நீர் இறைக்கும்**

**மின் பம்புகள்**

**கட்டுப்பண முறையிலும் பெறலாம்**

# ஹோம் பிரின்ஸ்

லிமிட்.

இல: 82, கன்னாதிட்டி - யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல: 8310


## டெஸ்ட் ஆரம்பம்

சென்னை, ஜன. 12

இந்திய — இங்கிலாந்து கோஷ்டிகளுக்கிடையிலான 5-வது கிரிக்கெட் டெஸ்ட் நாளை சென்னை சேப்பாக்கம் சிதம்பரம் விளையாட்டு மைதானத்தில் நடைபெறுகிறது.

இதுவரை நடைபெற்ற 4 டெஸ்ட்களில் இந்தியா ஒரு டெஸ்டில் வெற்றிபெற்றதும் 3 டெஸ்ட்கள் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்ததும் தெரிந்ததே.

## தமிழ்ஈழ

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வைக்கப்படுவதற்கு ஆதரவு தெரிவித்திருந்தனர் என்று லண்டனிலிருந்து கிடைக்கப்பெற்ற செய்திகள் தெரிவித்தன.

கொழும்பு — லண்டன் தொலைபேசி சேவை தாமதம் காரணமாக மேலும் தகவல்களை நேற்றிரவு பெறமுடியவில்லை.

## யாழ். மாவட்ட...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

படவேண்டும்'' என்றார்.

திரு. நடேசு இராசேந்திரம் பேசுகையில் கூறியதாவது:

### மருந்துகள் வீண் விரயம்

''சித்த ஆயுள்வேத வைத்தியசாலைகளில் மருந்துவகைகள் வீண்விரயம் செய்யப்படுகின்றன. இவ்வைத்தியசாலைகளைக் கவனிக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

தலைவர் திரு. நடராசா உறுப்பினர்களின் பேச்சுகளுக்குப் பதிலளித்துப் பேசுகையில், இதுகாலவரையும் நாங்கள்விடுத்த கோரிக்கை எதையும் அரசாங்கம் நிறைவேற்றவில்லை யாழ். பல்கலைக்கழகத்துடன் இது விஷயமாகத் தொடர்பு கொண்டு சித்த வைத்தியத் துறையை உரிய முறையில் நடாத்தத்தான் வேண்டும்'' என்றார்.

''பல்கலைக்கழகத்தில் உள்ளவர்கள் மேல்நாட்டு வைத்தியக் கல்வியில் நம்பிக்கை கொண்டுள்ளவர்கள் என்றும் இதுகுறித்து பல்கலைக்கழகப் பேராசிரியர்களுடன்தொடர்பு கொண்டு ஒரு குழுநிலையில் ஆராய்ந்து விரைவில் ஒரு முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமென்றும் குறிப்பிட்ட திரு. நடராசா, தென்னிந்தியாவில் சித்த ஆயுள்வேத வைத்தியம் சிறந்தமுறையில் நடைபெறுவதால் இங்கிருந்து மாணவர்களை அனுப்பி பயிற்சி பெற ஒழுங்குசெய்யவேண்டும் என்றார்.

திரு. சு. நடராசா தொடர்ந்து பேசுகையில், ''சபைகளால் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு இதுவரை என்ன நட்வடிக்கை எடுக்கப்பட்டதென்பது அங்கத்தவர்களுக்குத் தெரியவேண்டும் என்றும், ஒரு உபகுழு இருந்தால் எதற்கும் மேல்நடவடிக்கைகள் எடுக்க உதவியாய் இருக்கும் என்றும் சொன்னார். பிரேரணைகள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

இதைத் தொடர்ந்து சபை நடவடிக்கைகளை கவனிக்க வைத்தியக் கலாநிதி திரு. ஆ. நடராசா கோப்பாய் எம். பி. திரு. ஆ. மு. ஆலாலசுந்தரம், திரு. நடேசு இராஜேந்திரன் ஆகியோர் கொண்ட குழுவொன்று தெரிவு செய்யப்பட்டது. (மா)


ST. JOHN'S COLLEGE, JAFFNA.

Wanted immediately a GRADUATE TO TEACH PHYSICS in Advanced Level Classes.

Call over at College Office on Saturday the 16th of January at 3-00 p. m. with Certificates.

PRINCIPAL

1968



வெளிவந்துவிட்டது! சித்திநிச்சயம்!

# பொது அறிவு

A/L தகமையுடன் ஆசிரிய நியமனப் பரீட்சைக்கும்; அரசாங்க போட்டிப் பரீட்சைக்குமுரியது.

ஆசிரியர்: பாபூ விலை: 16. 50

**பூபாலசிங்கம் புத்தகசாலை**

பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.


### யாழ்ப்பாணப்பகுதியில்

# விசர்நாய்கடி நோய் தடுப்பு திட்டம் அமுலாக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பகுதியில் விசர்நாய்க்கடி நோய் ஒழிப்பு திட்டமொன்றை யாழ்ப்பாணம் சுகாதாரப் பகுதியினர் மேற்கொள்ள இருக்கின்றனர். இதற்கென விசேட குழுக்களும், வாகனங்களும், தடுப்பு ஊசி மருந்துகளும் கொழும்பிலிருந்து வரவிருக்கின்றன.

இத்திட்டம் காங்கேசன்துறை, மானிப்பாய் சுகாதாரப் பகுதிகளில் இம் மாதம் 18-ம் திகதி ஆரம்பிக்கப்படவிருக்கிறது. இதற்கான ஏற்பாடுகளை காங்கேசன்துறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஆர். தெய்வேந்திரன் செய்துள்ளார்.

இத்திட்டத்தின்கீழ் கட்டாக்காலி நாய்கள் ஒழிப்பு, வீட்டில் வளர்க்கும் நாய்களுக்கு தடுப்பூசி கொடுத்தல் போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்படவிருக்கின்றன.

ஒவ்வொரு சுகாதசுரப்பகுதிகளிலும், விசேடமாக அமைக்கப்படும் நிலையங்களில் வீட்டு நாய்களுக்கு இலவசமாக தடுப்புஊசி ஏற்றப்படும். அந்தந்தப் பகுதி சுகாதார பரிசோதகர்களிடமிருந்து விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணப் பகுதியில் இம்மாதம் 18ம் தேதி ஆரம்பிக்கப்படும் இத்திட்டம் ஏப்ரல் மாதம்வரை தொடர்ந்து அமுல்செய்யப்படவிருக்கிறது.

யாழ்ப்பாணப் பகுதியில் விசர்நாய்க்கடி நோய் கடந்த சிலகாலங்களாக கூடுதலாக காணப்படுவதாலும், இதற்கு வைத்தியசாலைகளில் பல சிரமத்தின் மத்தியில தொடர்ந்து 14 நாட்கள் ஊசி போட வேண்டியிருப்பதாலும் தகுந்த சிகிச்சைபெறுவோர் இறப்பதாலும், சுகாதாரப்பகுதியினர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

ஒவ்வொரு பகுதிகளிலும் பொதுமக்கள் இத்தடுப்பு நடவடிக்கைகளுக்கு பூரணஆதரவு வழங்க வேண்டுமென்றும், அந்தந்தப்பகுதிகளில் அமைக்கப்படும் நிலையங்களில் வீட்டில் வளர்க்கும் நாய்களை கொண்டு சென்று இலவசமாக தடுப்பு ஊசி போட்டுக்கொள்ளுமாறும் சுகாதாரப் பகுதியினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். [க]

## திறப்புக்கோர்வை

இலங்கை வங்கிக்கு முன்னால் வீதியில் கண்டெடுக்கப்பட்ட திறப்புக் கோர்வை ஒன்றை கோயில்வீதியைச் சேர்ந்த எம். வரேந்திரன் ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் பெற்றுக் கொள்ளலாம்.

### எரிசாராய ஊழல்

# றே, சதாசிவம் கமிஷன்களின் நடவடிக்கைகளை நிறுத்துக

## சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு

சென்னை, ஜன. 11

தமிழ்நாடு — கேரள அரசுகளுக்கு எதிரான எரிசாராய ஊழல் குற்றச்சாட்டுகளை விசரணை செய்துவரும் 'றே' காமிஷன், 'சதாசிவம், கமிஷன் ஆகியவற்றின் நடவடிக்கைகளை உடன் நிறுத்துமாறு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

எரிசாராய ஊழல் குற்றச்சாட்டுக்கள் மீது விசாரணை நடாத்துவதற்கு தமிழக அரசு சதாசிவம் கமிஷனையும், மத்திய அரசு றே கமிஷனையும் நியமித்திருந்தது. இந்த இரு கமிஷன்களும் செல்லுபடியற்றது என தீர்ப்பு வழங்குமாறு அண்மையில் தாக்கல் செய்த மனுவை நிராகரித்த சென்னை உயர் நீதிமன்றம் இரு கமிஷன்களுமே செல்லுபடியானவை எனத் தீர்ப்பளித்திருந்தது.

இத்தீர்ப்பை எதிர்த்து தாக்கல் செய்திருந்த அப்பீல் மனுவை ஏற்றுக்கொண்ட் வேறு 3நீதியரசர்களைகொண்ட சென்னை உயர் நீதிமன்றம் இன்று இரு கமிஷன்களினதும் நடவடிக்கைகளை நிறுத்துமாறு உத்தரவிட்டது. (இ)

## இப்படியும் நடக்கிறது

பெரிய பிரித்தானியா வானொலியிலிருந்து தமிழ்க் குரல்; அமெரிக்க வானொலியிலிருந்து தமிழ்க் குரல்; சீன வானொலியிலிருந்து தமிழ்க் குரல்; பிலிப்பைன்ஸ் வானொலியிலிருந்து தமிழ்க்குரல். இது பழையசெய்தி. பிரெஞ்சு வானொலியிலிருந்தும் தமிழ்க் குரல் கேட்கிறது.... ... உங்களுக்குத் தெரியுமா?

பிரான்ஸின் தலைநகர் பாரிஸிலிருந்து (குறிப்பாக பாரிஸ் 13—லிருந்து) தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் ஆதரவில் பிரெஞ்சு ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஒவ்வொரு வியாழக்கிழமையும் இரவு 7. 30 முதல் 8.30 வரை ஒரு மணி நேரம் ''செந்தமிழ் ஓசை'' எனும் நிகழ்ச்சியை ஒலிபரப்புகிறது. [தமிழர் ஒருங்கிணைப்புக் குழு ''எரிமலை'' எனும்'' ஏட்டை நடத்தி வருவதுடன், ஈழத்தின் சஞ்சிகைகள் பாரிஸ் தமிழருக்கு ஒழுங்காகக்கிடைக்கவும் வழிசெய்கிறது]

அண்மையில் ''செந்தமிழ் ஓசை'' வானொலி நிகழ்ச்சியில் யாழ்ப்பாணம், நாவலர்வீதியைச் சேர்ந்த இரத்தினம் அவர்களின் தாயார் காலமான மரண அறிவித்தல் செய்தி இடம் பெற்றிருந்தது. முதல் தடவையாக மரண அறிவித்தல் இடம் பெறுவதாகக் குறிப்பிட்ட அறிவிப்பாளர் ''தகனக்கிரியைகள் இன்று கோம்பயன் மணல் மயானத்தில் நடைபெற்றது'' என்று தெரிவித்ததோடுஇதனை அறிவித்தவர் பாரிஸ் பதினொன்றைச் சேர்ந்த இ. சிறிதரன் என்றும் கூறியது. எத்தனை வேகம்! எத்தனை உணர்ச்சி!

— ஊடுருவி

### விவசாயக் கடன்

# தவணைப்பணம்: அதிகரித்து வசூலிக்க உத்தரவு

(மாவிட்டபுரம்)

விவசாயக்கடன் கட்டத்தவறியவர்கள் செலுத்திவந்த தவணைப்பணத்தை அதிகரித்து வசூலிக்க மல்லாகம் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிடம் விவசாயக் கடன் பெற்று அதனை மீளச் செலுத்தாமையால் மல்லாகம் நீதிமன்றத்தில் ஏராளமானோர்மீது வழக்குகள் தொடரப்பட்டு அவர்கள் பகுதிபகுதியாக அப்பணத்தை மீளச் செலுத்திவந்தனர்.

ஒவ்வொரு தவணையிலும் 50ரூபா, 25ரூபா என்று மிகவும் குறைந்த தொகைகளையே செலுத்திவந்த இவர்களுக்கு மல்லாகம் நீதிபதி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இப்பணத்தை விரைவிலேயே செலுத்துவதற்கு வசதியாக தவணைப்பணத்தை அதிகரித்து வசூலிக்குமாறு அவர் உத்தரவிட்டுள்ளார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள ''ஈழநாடு'' லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி, 3[illegible]3 ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1982 ஆம் ஜனவரி மீ 13-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as NewsPaper. The General P.O. Sri Lanka Regd. Q.B.100236/81. P.O. Box 49, Jaffna. தொலைபேசி: 7707, 389, 8126.